ශ්‍රී ලංකා ප්‍රජාතාන්ත්‍රික සමාජවාදී ජනරජයේ ගැසට් පත්‍රය

අති විශෙෂ

# இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு வர்த்தமானப் பத்திரிகை

අතිවිශේෂමානது

අංක 2206/10 - 2020 දෙසැම්බර් මස 16 වැනි බදාදා - 2020.12.16

*2206/10 ஆம் இலக்கம் - 2020 ஆம் ஆண்டு திசெம்பர் மாதம் 16 ஆந் திகதி புதன்கிழமை*

(அரசாங்கத்தின் அதிகாரத்துடன் பிரசுரிக்கப்பட்டது)

## பகுதி I : தொகுதி (I) - பொது

### அரசாங்க அறிவித்தல்கள்

**2007 ஆம் ஆண்டின் 48 ஆம் இலக்க விசேட வியாபாரப் பண்டங்கள் அறவீட்டுச் சட்டம்**

5 ஆம் பிரிவின் கீழான கட்டளை

2007 ஆம் ஆண்டின் 48 ஆம் இலக்க, விசேட வியாபாரப் பண்டங்கள் அறவீட்டுச் சட்டத்தின் 2 ஆம் பிரிவின் கீழ், எனக்கு உரித்தாக்கப்பட்டுள்ள அதிகாரங்களுக்கமைய, இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசின் நிதி அமைச்சர் மஹிந்த ராஜபக்ஷ ஆகிய நான், தேசிய மருந்துகள் ஒழுங்குமுறைப்படுத்தும் அதிகார சபையில் (NMRA) பதிவு செய்யப்பட்ட எந்தவொரு மருந்து உற்பத்தி நிறுவனங்களாலும் வர்த்தக நோக்கம் அல்லாத, மருந்துகள் உற்பத்தி செய்யும் நோக்குடன், 2020 ஆம் ஆண்டு செத்தெம்பர் மாதம் 30 ஆந் திகதிய 2195/29 ஆம் இலக்க அதிவிசேட வர்த்தமானி அறிவித்தலில் வெளியிடப்பட்டுள்ள கட்டளையிலுள்ள அட்டவணையில் குறிப்பீடு செய்யப்பட்டுள்ள இ. மு. தலைப்பு இலக்கம் 2501.00 இன் கீழ் வகைப்படுத்தப்பட்டுள்ள உப்பு (சோடியம் குளோரைட் B.P.) இறக்குமதிக்கு ஏற்புடையதாகும் கிலோ கிராம் ஒன்றிற்கு 40 ரூபா எனும் விசேட வியாபாரப் பண்ட அறவீட்டில் இருந்து கிலோ கிராம் ஒன்றிற்கு 10 ரூபாவை அறவீடு செய்த பின்னரான எஞ்சிய தொகையினை தள்ளுபடி செய்வதற்கான கட்டளையினை மருந்துகள் உற்பத்தி வழங்குதல் மற்றும் ஒழுங்குமுறைப்படுத்தல் விடயத்துக்கு பொறுப்பாகவுள்ள இராஜாங்க அமைச்சின் செயலாளரின் பரிந்துரையின் பேரில் இத்தால் மேற்கொள்கின்றேன்.

இக்கட்டளை 2021, செத்தெம்பர் 30 ஆந் திகதி வரை செல்லுபடியுடையதாதல் வேண்டும்.

**மஹிந்த ராஜபக்ஷ,**
நிதி அமைச்சர்.

நிதி அமைச்சு,
கொழும்பு 01,
2020, திசெம்பர் 16.

01-89